**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>C.C. No. 47-2025</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 9 | | Examined as : | PW 8 |
| Name | : சேகர் | Defence | : |
| Father's Name | : ராசப்பன் | Court | : |
| Village | : மயிலாடுதுறை | Taluk | : மயிலாடுதுறை |
| Calling | : உதவி ஆய்வாளர், மயிலாடுதுறை. | | : |
| Age | : 59/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 07.08.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

( எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.)

<u>முதல் விசாரணை:–</u>

நான் தற்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.12.2022 அன்று காலை 9.00 மணிக்கு தலைமைக்காவலர் மதியழகன் என்பவரால் பதிவுசெய்யப்பட்ட நிலைய குற்ற எண். 442/2022 இதச பிரிவுகள், 452, 294(b), 323, பிரிவு 4 of TNPHW Act ன் கீழான வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ் மற்றும் சேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகளான ராமச்சந்திரன், கௌரி, இஸ்ரவேல், அர்ச்சுனன், சோமு, மகசர் சாட்சிகளான சுரேஷ் மற்றும் சேகர் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

2. பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரிகள் குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடியபோது விளநகர் பேருந்துநிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்த எதிரியை கடந்த 23.12.2022 அன்று 12.15 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் முதல் தகவல் பதிவு செய்த தலைமைக்காவலர் மதியழகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இவ்வழக்கில் காயம்பட்ட அசா1 மற்றும் அசா 6 ஆகியோர்கள் காயம் எதுவும் இல்லாமல், மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளதாக தெரியவந்த நிலையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான இதச பிரிவுகள் 452, 294(b), 323, பிரிவு 4 of TNPHW Act பிரிவுகளை இதச பிரிவுகள் 452, 294(b), 352, பிரிவு 4 of TNPHW Act பிரிவுகளாக மாற்றம் செய்து **சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை** தாக்கல் செய்தேன். அது **அசாஆ5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் எதிரியின் மீதான விசாரணையை முடித்து 23.05.2025 அன்று இதச பிரிவுகள் 452, 294(b), 352, பிரிவு 4 of TNPHW Act –ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

இந்த வழக்கில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு பிறகு 1 வாரம் கழித்து புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா1 ராமச்சந்திரன் எழுதிய புகார் போலீசாரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசா1, எதிரி ஆகியோர் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அசா1க்கும் எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வருவதை என் முதல் விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அசா1 மற்றும் அசா6 ஆகியோர் புறநோயாளியாக மயிலாடுதுறை மருத்துவமனையில் காண்பித்ததற்கான ஆதாரங்கள் மற்றும் குறிப்புகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எதிரியின் மனைவியை சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன், ஆனால் பட்டியல் சாட்சியாக சேர்க்கவில்லை. அவ்வாறு சேர்க்காததற்கு குறிப்பிட்ட காரணங்கள்

ஏதேனும் உண்டா என்றால் இல்லை. புகாருக்கு பிறகு சம்பவ இடம் சென்று முதற்கட்ட விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர், வரைபடம் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் , சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சொன்ன நாள், சொன்ன நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் அசா1க்கும் இடையேயான முன்விரோதத்தின் பேரின் கொடுக்கப்பட்ட பொய்ப்புகாரின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி, அசா1 மற்றும் அசா6 ஆகியோர்களை திட்டவோ தாக்கவோ இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**